மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில் நடந்தான் மாவீரன்
இவன் போன வழியில் புயல் என எழுந்து போரில் வந்தார் புலிவீரர் 2

உலக படைகள் ஒன்றாக வாரினும் உரிமை தன்னை இழப்போமா 2
அந்த நிலவும் கடலும் சான்றாக எங்கள் நிலத்தில் ஆட்சி விடுப்போமா 2

பாயும் புலிகள் வீரத்தை அஞ்சி பணிகொண்டிளப்பார் பகையாளர் 2
எங்கள் தாயின் விலங்கை அறுப்பவர் வாழ தனியாய் மலரும் தமிழ் ஈழம் 2

களத்தில் வீழும் வேங்கைகள் மேலாம் கல்லில் உறைவார் களையாக 2
அவர் உள்ளத்தில் கொண்ட கனவுகள் எல்லாம் முழையில் நிற்கும் நிலையாக 2

தாழ்வும் உயர்வும் நிலையெனச் சொன்ன தலைவன் வாய்மை தப்பாது 2
நல வாழ்வை இழந்து மறுகிய மாந்தர் மகிழ்ந்தே இருப்பர் இப்போது 2